திண்டுக்கல் மாநகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.1004/2026/அ7

நாள்: .07.2026

இம்மாநகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு குத்தகை உரிம இனங்கள் மற்றும் கடைகளை அனுபவித்துக் கொள்ளும் உரிம இனங்களை ஒப்படைத்திட திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் மின்னனு இணைய வழி மற்றும் நேரடி இணையவழி இல்லா ஒப்பந்தப்புள்ளிகள் வரும் 29.07.2026 புதன்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணி வரை பின்வரும் நிபந்தனைகளுடன் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | உரிம இனம் | செலுத்தப்பட வேண்டிய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை (ரூபாயில்) | செலுத்தப்பட வேண்டிய கூடுதல் முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| I) ஆண்டு குத்தகை உரிம இனங்கள் (ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலம் அனுபவித்துக்கொள்ளும் உரிமம்) (ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டு குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்யப்படும்) | | | |
| 1 | காமராஜர் பேருந்து நிலையத்தில் குறிப்பிட்ட நான்கு இடங்களில் தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் | 2,00,000/- | - |
| 2 | ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்தில் பலன் தரும் மரங்களின் காய்ப்பு பலன்களை மட்டும் அனுபவித்துக்கொள்ளும் உரிமம் (தென்னை மரம் தவிர) | 10,00,000/- | - |
| 3 | ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்தில் உள்ள தென்னை மரங்களின் காய்ப்பு பலன்களை மட்டும் அனுபவித்துக்கொள்ளும் உரிமம் | 10,00,000/- | - |
| 4 | காந்தி தினசரி காய்கனி சந்தைக்கு வெளிப்புறத்தில் தாலுகா அலுவலக சாலையில் கட்டப்பட்டுள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் | 5,00,000/- | - |
| II) கடைகள் (ஒப்படைக்கும் நாள் முதல் பனிரெண்டு ஆண்டு காலம் அனுபவித்துக்கொள்ளும் உரிமம்) (ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டு குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்யப்படும்) | | | |
| 1 | பேகம்பூர் – மார்க்கெட் கடைகள் - 3 (கடை எண்: 4,5,6 ) (தலா 1 கடைக்கு) | 3,00,000/- | - |
| 2 | கமலா நேரு சாலை மேல்மாடி கடை எண். 8 | 3,00,000/- | - |
| 3 | காமராஜர் பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கட்டிடத்தில் உணவக கட்டிடம் | 25,00,000/- | - |

Scanned with OKEN Scanner

| | | | |
|---|---|---|---|
| 4 | காமராஜர் பேருந்து நிலைய மேல்மாடிக் கடைகள்- 27 ( பழைய பயணிகள் தங்கும் விடுதி முதல் தள கடைகள்) (தலா 1 கடைக்கு) | 1,50,000/- | – |
| 5 | மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளி வாசல் சந்துக் கடைகள் 16 எண்ணம் (தலா 1 கடைக்கு) | 3,00,000/- | – |
| 6 | நாகல் நகர் வாரச்சந்தை வணிக வளாக கடைகள் 56 எண்ணிக்கை (தலா 1 கடைக்கு)<br><br>\| \| கடைகளின் எண்ணிக்கை \| கடைகளின் அளவுகள் \|<br>\| A \| 21 \| 6.00 X 3.00 \|<br>\| B \| 16 \| 3.00 X 3.00 \|<br>\| C \| 11 \| 6.00 X 3.00 \|<br>\| D \| 2 \| 4.46 X 4.42 \|<br>\| E \| 6 \| 2.88 X 3.54 \| | 2,50,000/- | – |
| 7 | நாகல் நகர் பழைய இரும்பு மற்றும் மர வியாபார வணிக வளாக கடைகள் 52 எண்ணிக்கை (தலா 1 கடைக்கு)<br><br>\| \| கடைகளின் எண்ணிக்கை \| கடைகளின் அளவுகள் \|<br>\| A \| 10 \| 4.70 X 6.10 \|<br>\| B \| 14 \| 4.70 X 6.10 \|<br>\| C \| 14 \| 4.70 X 6.10 \|<br>\| D \| 14 \| 4.70 X 6.10 \| | 2,50,000/- | – |
| 8 | காந்தி தினசரி காய்கனி சந்தையின் வெளிப்புறமுள்ள கடைகள் (கடை எண்.7, 8, 11, 12) (தலா 1 கடைக்கு) | 3,00,000/- | – |
| 9 | காந்தி மார்க்கெட் புதிய கடை - 1 | 3,00,000/- | – |
| 10 | தாடிக்கொம்பு சாலையில் உள்ள பங்க் ஸ்டால் | 1,00,000/- | – |

## நிபந்தனைகள்

1) ஒவ்வொரு உரிமத்திற்கும் செலுத்தப்பட வேண்டிய வைப்புத்தொகை மற்றும் கூடுதல் முன்வைப்புத் தொகைகளை ஆணையர், திண்டுக்கல் மாநகராட்சி (THE COMMISSIONER, DINDIGUL CITY MUNICIPAL CORPORATION) என்ற பெயரில் திண்டுக்கலில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் காசாக்கப்படும் வகையில் வங்கி வரைவோலையாக பெற்று மின்னனு இணைய வழி மற்றும் நேரடி இணையவழி இல்லா ஒப்பந்தப்புள்ளிக்கு தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டும்.

2) மேலும், ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்பவர்கள் மாநகராட்சியின் வரி மற்றும் வரியற்ற இனங்களில் 2025-26 நிதியாண்டு வரை எவ்வித நிலுவையும் இல்லை என்ற சான்றினை ஒப்பந்தப்புள்ளி நடை பெறுவதற்கு மூன்று தினங்களுக்கு முன்னதாகவே அதற்கான கட்டணத் தொகை ரூ.5000/-ஐ மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி நிலுவையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும், நிலுவை ஏதும் கண்டறியப்பட்டால் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்று கொள்ளப்பட மாட்டாது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

3) மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் முந்தைய தினம் (28.06.2026) வரை tntenders.gov.in என்ற இணையதளம் வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள்

Scanned with OKEN Scanner

29.07.2026 அன்று நடைபெறும் இணையவழி இல்லா சாதாரண வகையிலான ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் நிறைவு பெற்று திறக்கப்பட்டவுடன் வருகை புரிந்தவர்கள் முன்னிலையில் இணையவழியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

4) சொத்து மதிப்புச்சான்று ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அதற்கு பதிலாக கூடுதல் வைப்புத்தொகை தேவைப்படும் மற்றும் நிர்வாகம் முடிவு செய்யும் இனத்திற்கு மாநகராட்சி கருவூலகத்தில் ரொக்கமாக செலுத்தப்படவேண்டும். அதற்கான ரசீது, ஆதார் கார்டு, பான் கார்டு, 2025-26 ஆண்டிற்கான வருமான வரி சான்றிதழ் நகல்களை பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

5) **மின்னனு இணைய வழி மற்றும் நேரடி இணையவழி இல்லா ஒப்பந்தப்புள்ளி இனங்களில் ஒற்றை (Single) ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.** இருப்பினும் மேற்கூறிய இரண்டு இனங்களிலும் தலா 1 ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டிருப்பின் உயர்ந்தபட்ட கேள்வி கோரியவருக்கு ஒப்படைத்திட பரிசீலனை செய்யப்படும்.

6) ஒப்பந்தப்புள்ளிக்கு செலுத்தப்படும் வைப்புத் தொகைகள் அனைத்தும் மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கப்படும். கூடுதல் தொகைக்கு கோரிய முதல் இரண்டு உச்ச கேள்விதாரர்கள் தவிர மற்றவர்களின் வைப்புத் தொகைகள் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் நிறைவுற்றவுடனும், இரண்டாவது உச்ச கேள்விதாரரது வைப்புத் தொகை மாமன்ற கூட்டத்தில் முதல் உச்ச கேள்வி உறுதி செய்யப்பட்டவுடனும் திரும்ப வழங்கப்படும்.

7) இணையவழி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள விரும்பும் தனிநபர்கள் தங்களது ஆதார், வருமானவரி அட்டை, பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி விபரங்களுடனும், கம்பெனி கூட்டு விற்பனை நிறுவனத்தினர் தங்களது கூட்டு பத்திர ஆவணங்கள் நிறுவனத்தின் வருமானவரி அட்டை, மத்திய சரக்கு மற்றும் சேவைவரி கணக்கு எண். மின்அஞ்சல் முகவரி போன்ற விபரங்களுடனும் மாநகர எல்லைக்குள் உள்ள ஏதேனும் ஒரு பட்டய கணக்காளர் (Chartered Accountant), மத்திய சரக்கு மற்றும் சேவை வரி ஆலோசகர்கள் மற்றும் வருமானவரி ஆலோசகர்கள் அலுவலகத்தில் சென்று, விண்ணப்பித்து மின்னனு டோக்கன்களை பெற்று தனியர் கணினி பிரௌசிங் சென்டர் வழியாக மேற்கண்ட மின்னனு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.

8) உரிம இனத்திற்கான மின் இணைப்புக்கான வைப்புத்தொகை மற்றும் இதர கட்டணங்களை உரிமதாரரே தனது சொந்த பெறுப்பில் ஆணையர், திண்டுக்கல் மாநகராட்சி. பெயரில் மின் வாரியத்தில் செலுத்தி மின் இணைப்பு பெற்றுக்கொள்ளவேண்டும்.

9) மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான இதர விபரங்கள் கோருபவர்கள் அலுவலக வேலை நாட்களில் மாநகராட்சி வருவாய் பிரிவை அணுகி விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையர்**
**திண்டுக்கல் மாநகராட்சி**

Signature Not Verified
Digitally signed by SUDHARSAN K
Date: 2026.07.14 10:09:21 IST
Location: Tamil Nadu-TN

Scanned with OKEN Scanner